ISSN 2454-3993

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

■ மலர் 3 ■ சிறப்பிதழ் 4 ■ மார்ச், 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

SHANLAX #SINCE1990



பதிப்பாசிரியர்கள்
திருமதி. மு. கவிதா
முனைவர் ஆ. ஜோஸ்பின் செலின் மேரி

தொகுதி - 1

புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

மற்றும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

தமிழ்த்துறை
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
அமல அன்னை நகர், தாமரைப்பாடி,
திண்டுக்கல் - 624 005.

UGC Approved Journal Number: 40729
VOLUME 3| SPECIAL ISSUE 4| MARCH 2019
Shanlax International Journal of Tamil Studies
(A Peer-reviewed - Scholarly Indexed Quarterly Journal)

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

# "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)



| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2019 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை,<br>புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>தாமரைப்பாடி, திண்டுக்கல் - 624 005. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 252 |

**ISSN: 2454 - 3993 (UGC Approval Number: 40729)**

பன்னாட்டுக் கருத்தரங்கம் **"பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"**

# இலக்கணங்கள் கூறும் கைக்கிளையும் பெருந்திணையும்

**முனைவர் அ. ஜனார்த்தனி பேகம்**
உதவிப் பேராசிரியர், புனித அந்தோணியார் மகளிர் கல்லூரி, தாமரைப்பாடி

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 4

**மாதம்:** மார்ச்

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

அன்பின் ஐந்திணையை அடுத்து காணப்பெறும் திணைகள் கைக்கிளையும் பெருந்திணையுமாகும். இவை பற்றிய இலக்கண நூலார் தரும் கருத்துக்களைத் தொல்காப்பியம், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை கொண்டு அறியலாம். உலக இலக்கியங்கள் அனைத்திலும் காணப்படாத தனிச் சிறப்பாக அகப்பொருள் இலக்கணம் தமிழ் மொழியில் அமைந்துள்ளது. இவ்வகப்பொருள் இலக்கணம் பொதுவாக அன்பின் ஐந்திணை என்றும் கைக்கிளை பெருந்திணை என்றும் பாகுபாடு செய்யப்படுகிறது. கைக்கிளையை ஒருதலைக்காமம் என்றும் பெருந்திணையை பொருந்தாக்காமம் என்றும் வரையறை செய்வர். தொல்காப்பியரும் நம்பியகப் பொருளாசிரியரும் இவ்விரு திணைகள் பற்றிய கோட்பாடுகளை எங்ஙனம் வரையறை செய்கின்றனர் என்பதை ஆய்வதை இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கைக்கிளை விளக்கம்

கைக்கிளைக்கு விளக்கம் கூற வந்த இளம்பூரணர் கைக்கிளை என்ற பொருண்மை யாதோவெனின் 'கை' என்பது சிறுமை பற்றி வரும்: அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல். கிளை என்பது உறவு பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு கைக்குடை, கயைெட, கைவாள், கைஒலியல, கை வாய்க்கால் எனப் பெருமை இல்லாதவற்றை வழங்குவதாயின் என்றுக்கூறுவர். இக்கைக்கிளைப்பற்றி பன்னிருபாட்டியல், 'கூட்டமில்கிளவி' என்று கூறுகின்றது. வீரசோழியம் 'கேட்போரில்லாக் கிளவிகள்' எனக் கூறுகிறது. ஒரு மருங்கு பற்றிய கேண்மை 'இ ஒருதலை - வேட்கை என்றும் உரையாசிரியர்கள் கூறுவர். இதனை வ.சுப.மாணிக்கம் 'சிறிய உறவு' என்று குறிப்பிடுவார். இவற்றிலிருந்து கைக்கிளை என்பது தலைவன் தலைவி ஆகிய இருவரிடத்தும் ஒருவருக்கு விருப்பமில்லாதபோது மற்றொருவர் அவரை விரும்புகின்ற ஒருதலைக் காதல் எனலாம்.

## தொல்காப்பியத்தில் கைக்கிளை

தொல்காப்பியம் கைக்கிளை பற்றி அகத்திணையியல், களவியல், செய்யுளியல் என்ற மூன்று இயல்களில் கூறுகிறது. தொல்காப்பியர் எழுதிணையைப் பற்றிக் கூறும்போது

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்**
**முற்படக் கிளைந்த எழுதிணை யென்ப"**

**(தொல்-பொருள்-.அகம்-.நூா:1)**

என்று அகத்திணையியலில் கூறுகின்றார். இங்கு இடையில் நின்ற குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்தும் அதன்தன் நிலத்தின் பெயரால் பெயர் பெறுகின்றன.

இங்கு தமிழர் பண்பாட்டினை போற்றிப் பாதுகாத்த தொல்காப்பியர் அத்தகைய தமிழரின் ஒழுக்க நெறிகளைப் பற்றிப் பேசும்போது எல்லோராலும் விரும்பிப் போற்றப்படும் ஐந்திணைத் தானே முதலில் பேசியிருக்க வேண்டும். அங்ஙனமிருக்க இங்கு ஒருதலைக் காதலாகிய கைக்கிளையை முதலில் வைத்துக் கூறியதற்கான காரணம் என்ன என்பது சிந்தித்தற்குரியது அகத்திணையியலில் வரும்,

**"முன்னர் நான்கும் முன்னதற் கென்ப"** **(தொல்-பொருள்-அகம்-1)**

என்ற நூற்பாவிற்கு விளக்கம் கூற வந்த நச்சினார்கினியார் 'இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழ்ந்த காட்சியும், ஐயமும், தெளிதலும், தேறலும் என்ற நான்கும் கைக்கிளைக்கு உரியன என்று கூறுகிறார். மேற்கூறிய காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்ற நான்கையும் கூறும்போது "இந்நான்கும் கைக்கிளைக் குறிப்பாம்" என்ற இளம்பூரணரும் கூறுகின்றார். கைக்கிளையைத் தொல்காப்பியர்

**"காமம் சாலா இளமை யோள்வயின்**
**ஏமம் சாலா இடும்பை எய்தி**
**நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்**
**சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**
**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"**

**(தொல்-.அகத்-50)**

என்று விளக்குகிறார். தலைவன் காமவுணர்வு தோன்றாத பெண்ணிடம் தானே காதல் கொண்டு, அவளது மறுமொழி பெறாது தானே சொல்லி இன்புறல் கைக்கிளை என்பது இந்நூற்ப்பாவால் விளங்குகிறது. எனவே ஒத்த அன்பின்றி ஒருவர் மாட்டு மட்டுமே தோன்றுகின்ற குறையுடையதாய் இருப்பதால் தொல்காப்பியர் இக்கைக்கிளையை அன்பின் ஐந்திணையுள் அடக்கவில்லை என்று தோன்றுகிறது.

காமஞ்சாலாதவளிடத்து நிகழும் கைக்கிளைக்கு விளக்கம் கூறும்போது இளம்பூரணர் புல்லித்தோன்றும் கைக்கிளை என்றதனால் புல்லாமற் தோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும். அது களவியலுள் கூறப்படும் என்பார் புல்லாமற் தோன்றும் என்றதனால் அசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்றும் சிறப்பில்லாக் கைக்கிளை என்பார் நச்சினார்கினியர்.

எனவே தொல்காப்பிய அகத்திணையியல், களவியல, செய்யுளியல் ஆகிய மூன்றிலும் கூறப்படும் அகத்திணைக் கைக்கிளை, காமஞ்சாலாதவளிடத்து நிகழும் சிறப்புடைக் கைக்கிளை, சிறப்பில்லாக் கைக்கிளை என்ற மூன்றும் ஆண்பால் கைக்கிளை பற்றியன. இங்கு தொல்காப்பியர் பெண்பாற் கைக்கிளைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

'உயிரினும் சிறந்தன்று நாணே' என்று பெண்களுக்கு இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர் எனவே அவர் பெண்பார் கைக்கிளையை பற்றி குறிப்பிடவில்லை.

**நம்பியகப்பொருளில் கைக்கிளை**

நம்பியகப்பொருள் ஆசிரியர், களவுக் காலத்தில, களவுப் புணர்ச்சிக்கு முன் கைக்கிளை நிகழுமென்று கூறி அதனை விளக்கும்போது

**"காமஞ் சான்ற இளமையோள் வயின்**
**குறிப்பறி காறுங் குறுகாது நின்று**
**குறிப்படு நெஞ்சொடு கூறலாகும்"**

**(நம்பி அகப்பொருள் - 28)**

என்று கூறுகிறார். 'காமஞ்சாலா இளமையோள்' என்று தொல்காப்பியர் கூறியதற்கு முற்றிலும் மாறாக இவருடைய கருத்து உள்ளது. மேலும் ஒழிப்பியலில் அகப்புறக் கைக்கிளை என்ற மற்றொரு வகை அமைத்து

**"காமஞ்சாலா இளமையோள் வயிற்**
**குறிப்பறி வுறாது குறுகியாங் கவளோ**
**டிறப்பக் கூறுவ தகப்புறக் கைக்கிளை"**

**(நம்பி அகப்பொருள் - 241)**

என்று விளக்குகிறார். எனவே காமஞ்சான்ற இளமையுடையவள் மாட்டு ஏற்படுவது அகப்பொருள்கைக்கிளை என்பதும் காமம்சாலா இளமையோள் மாட்டு ஏற்படுவது அகப்புறக் கைக்கிளை என்பதும்இ தெளிவுபடுகிறது. அகப்பொருள் கைக்கிளை ஐந்திணைக்கு உட்பட்டது என்றும், அகப்புறக் கைக்கிளை ஒருதலைக் காதலாகி ஐந்திணைக்கும் புறம்பானது என்றும் ஆசிரியர் விளக்குவது புலனாகிறது. தொல்காப்பியர் களவுக்குரிய செயல்களாக காட்சி, ஐயம், துணிவு,

குறிப்புரை, ஆகியவற்றைக் கூறியிருந்தாலும் அவற்றைக் கைக்கிளைக்குரிய செயல்களாகக் கொள்ள வில்லை. கைக்கிளையைக் களவுக்கு முன்னோடியாகக் கருதும் கருத்தும் தொல்காப்பியரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் நம்பி தொல்காப்பியர் நூற்பாக்களுக்குத் தாம் ஒரு விளக்கங் கூறி அவற்றைக் கைக்கிளைக்குரிய செய்திகளாகத் தனியே வகுத்துக் கூறியுள்ளார்.

### பாடாண்திணை கைக்கிளை

புறப்பொருள் வெண்பாமாலை பாடாண்திணையில் ஒரு கைக்கிளையைப் பற்றிக் கூறுகிறது. 'ஒர தலைவன் மீது அளவில்லாத காதல் கொண்ட பெண்ணொருத்தி அத்தலைவனின் மாலையை விரும்புவது பாடாண் கைக்கிளையாகும்.

**"தண்டாக் காதல் தளரியல் தலைவன்**
**வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று"**

என்பது நூற்பா இதற்கு உரையாசிரியர்' மற்றொருவகைக் காமம் என்றதனால் கைக்கிளைப் படலத்துள் கூறுகின்ற பெண்பாற் கூற்றுக் கைக்கிளை வேறு பாடாண்திணையில் கூறப்படும் இப்பெண்பாற் கூற்றுக் கைக்கிளை வேறு என்று குறிப்பிடப்படுகின்றார். எனவே தொல்காப்பியப் பாடாண் திணையில் கூறப்படும் தலைவனைப் புகழ்வதை நோக்கமாகக் கொண்ட பாடாண் கைக்கிளையும் இக் கைக்கிளையும் ஒன்றெனக் கொள்ளலாம் என்பதற்கு இடமிருக்கிறது.

### பெருந்திணை

தொல்காப்பியர் பெருந்திணைச் செய்திகளைப் பொருளதிகார அகத்திணையியலில் 51 ஆவது நூற்பாவில் விளக்குகிறார். இந்நூற்பாவில்

1. தலைவன் மடலேறுதல்
2. தலைவன் தலைவி இளமை கழிந்தபின் இன்புறும்நிலை
3. தேறுதல் ஒழிந்த காமத்தின் மிகுதியான நிலை
4. காமமிகுதியால் வலிதில் கூடுதல்.

என்பனவற்றைப் பெருந்திணையின் கூறுகளாகக் கூறுவார். 'மலரினும் மெல்லியது காமம்' என்ற நிலை பற்றிய சூழலில் காதல் ஊரறியப் புலப்படுதல், இளமை தீர்ந்த நிலையில் காதல் கொள்ளுதல், கட்டுப்படுத்த முடியாத காமத்தின் மிகுதி, மிகக் காமத்தால் ஏற்படும் வன்முறை ஆகிய நெறிமாறிய நிலைகள் இங்கு பெருந்திணையாகப் பேசப்படுகின்றன. பெருந்திணையின் பாடுபொருளை நோக்க அன்பின் ஐந்திணையின் நுண்ணிய காதல் உணர்வின் விழுமிய நிலையிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது.

### நம்பியகப் பொருளில் பெருந்திணை

நம்பியாசிரியர் கைக்கிளையை அகம்,அகப்புறம் என இரண்டாக்கி உரைப்பது போலவே பெருந்திணையையும் அகப்பொருட் பெருந்தினை அகப்புறப் பெருந்திணை என இருவகைப் படுத்துவர். அகன்றுழிக்கழக்கல், மடற்கூற்று, குறியிடையீடு, தெளிவிடை விலங்கல், வெறிக்கொள்கை, உடன்போக்கு, பூப்பியல் உரைத்தல், பொய்ச்சூளுரை தீர்ப்பில் ஊடல், போக்கழுங்கல், பாசறைப் புலம்பல், பருவம் மாறுபடுதல், வன்புறையெதிர்த்து மொழிதல், மனைவியும் தானும் வனமடைந்து நோற்றல் ஆகிய பதினான்கு நிலைகளை அகப்பொருள் பெருந்திணை என்றும், மடலேறுதல், விடைதாழல் குற்றிசை, குறுங்கலி, சுரநடை, முதுபாலை, தாபதநிலை, தபுதாரநிலை ஆகிய எட்டு நிலைகளை அகப்புறப் பெருந்திணை என்றும் விளக்குகிறார். தொல்காப்பியர் நான்கு நிலைகளை மட்டுமே பெருந்திணைக் கூறுகளாகக் கூற நம்பியாசிரியர் இரு வேறு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு 22 நிலைகளை எடுத்துக்காட்டுகிறார். இப்பெருந்திணையை நம்பியாசிரியர் ஒலிபியலில் மட்டுமே விளக்குகிறார். தொல்காப்பியர் கூறுகின்ற சில புறத்திணைக் கூறுகளை நம்பியாசிரியர் அகப்புறப் பெருந்திணை என்று காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தொல்காப்பியம், நம்பியகப்பொருள் ஆகிய இலக்கண நூல்களின் கைக்கிளை, பெருந்திணைக் கோட்பாடுகளை நோக்குகிள்றபோது பிள்வரும் முடிவுகளைப் பெறமுடிகிறது. தொல்காப்பியர், கைக்கிளை, பெருந்திணைகளை பொருளதிகார அகத்திணையியலில் விளக்க நம்பியாசிரியர்

கைக்கிளையை அகத்திணையியலிலும் ஒழிபியலிலும் விளக்கி பெருந்திணையை ஒழிபியலில் மட்டுமே விளக்குகிறார். தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணைகளைப் பாகுபடுத்தாது அவற்றின் கூறுகளை மட்டுமே விளக்க நம்பியாசிரியர் கைக்கிளையை அகப்பொருள் கைக்கிளை அகப்புறக் கைக்கிளை என்றும், பெருந்திணை என்றும் பாகுபடுத்தி விளக்குகிறார். தொல்காப்பியர் களவுக்குரிய செய்திகளாகக் கொள்வனவற்றை நம்பியாசிரியர் கைக்கிளைக்குரிய செய்திகளாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் களவுக்கு முன்னோடியாகக் கைக்கிளையைக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியம் கைக்கிளை பெருந்திணைக்குரிய மாந்தர்களை வரையறுக்காத நிலையில் நம்பியகப்பொருள் இவற்றிற்குரிய மாந்தர்களையும் வரையறுத்துக் கூறுகிறது. தொல்காப்பியர் பெருந்திணையின் கூறுகளாக நான்கினைக்கூற நம்பியாசிரியர் இரு பிரிவாகப் பிரித்து இருபத்திரண்டு கூறுகளைக் கூறுகிறார்.

## முடிவுரை

தொல்காப்பியர் அன்பின் ஐந்திணையின் நுண்ணிய காதல் உணர்வின் விழுமிய நிலையிலிருந்து வேறுபட்ட நிலையாகப் பெருந்திணையைக் காட்ட நம்பியாசிரியர் அன்பிள் ஐந்திணைக் கூறுகளையும் அகப்பொருள் பெருந்திணையில் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியர் கைக்கிளை பெருந்திணைகளை அன்பின் ஐந்திணையிலிருந்து வேறுபடுத்திக் காட்ட நம்பியாசிரியர் இத்திணைகளை இருவகைப்படுத்தி அவற்றுள் அகப்பொருள் கைக்கிளையும், அகப்பொருள் பெருந்திணையும் அன்பின் ஐந்திணையுள் அடங்கும் என்று விளக்குகிறார். தொல்காப்பியர் கூறுகின்ற சில புறத்திணைக் கூறுகளை நம்பியாசிரியர் அகப்புறப் பெருந்திணை என்று காட்டுவது புதுமையாகத் தோன்றுகிறது.